யாக இருக்க வேண்டியதும் இம்மாநிலப் போலீசினுடைய கடமை யாகிறது. ஆகவேதான், அப்படி ஏதேனும் நேர்ந்துவிடுகிற நோத்தில் அதிகமான பாதுகாப்பு தேவை என்பதற்காகத்தான், இங்கிருந்து சென்ற போலீஸ் படையோடு, மத்திய அரசாங் கத்தைச் சேர்ந்த போலீஸ் படையிலிருந்து 400 பேர் கொண்ட மூன்று கம்பெனிகளை வரவழைத்து, கோவைக்கு அருகாமையிலே வைத்துக்கொண்டார்கள்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: மத்திய அரசாங்கத்தால் அனுப்பப்படுகிற அந்தப் போலீஸ் படையினருக்கு ஆகும் செலவை மாநில அரசு ஏற்றுக்கொள்ளுகிறதா? அல்லது மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநில அரசு அதை வரவழைக்கின்ற நேரத்தில் மாநில அரசுதான் அவைகளை ஏற்றுக் கொள்ளுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், நாம் கேட்டோ கேட்காமலோ மத்திய அரசு காவல் படை இங்கே வரக்கூடிய நேரத்தில், அதைக் கண்ட்ரோல் செய்யக்கூடிய அதிகாரம் அவர்களிடத்தில் தானே இருக்கிறது? அந்தக் கண்ட்ரோல் செய்யக்கூடிய அதிகாரம் நம்மிடத்தில் இல்லை என்பது உண்மை தானே?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உண்மைதான்.

Hindi Examinations.

*2 Q.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether instructions have been issued by the Government to make Hindi Examinations at University Level optional from 1968?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தி கட்டளைச் சொற்கள் இருந்ததால் என்.சி.சி. பயிற்சியை இந்த அரசாங்கம் ரத்துசெய்து இரண்டாண்டுக் காலம் ஆகிறது. மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கற்பிக்கும் என்.சி.சி. படைப் பயிற்சியை இந்த அரசாங்கம் எப்பொழுது திரும்பவும் தொடங்கும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அடிப்படைக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி கேட்கவும்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, தமிழகத்தில் இந்தி மொழியைப் பரப்பும்பொருட்டு, இந்த இந்திப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்கவேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அடிப்படைக் கேள்விக்கு இது தொடர்புடையதில்லையென்றாலும், அப்படிப்பட்ட முயற்சி எதுவும் இருப்பதாக இந்த அரசுக்குத் தகவல் வரவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. Minister for Education be pleased to state whether the Government would allow students of this State who wish to seek appointments in North Indian States, to study Hindi as optional subject in High schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக்கழகத்தில் பல்வேறு மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. இரண்டாவது பகுதியில் இந்தி மொழியும் ஒரு விருப்பப் பாடமாக இருந்துகொண்டு வருகிறது; அதை எடுத்துப் படிக்க விரும்புகிறவர்கள் படிக்க வாய்ப்பு இருக்கிறது. பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையிலும், உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்துத்தான் அரசாங்கம் நேரடியாகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறது. பல்வேறு பாடத் திட்டங்கள், மொழிகள், மற்றவைகளைப் பல்கலைக் கழகம்தான் முடிவு செய்கிறது. இப்பொழுதிருக்கும் நிலைமை, சென்ற பல ஆண்டுகளாக விருப்ப பாடங்களாகப் பல்வேறு மொழிகள் போதிக்கப்படுகின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி, பெங்காலி, உருது, குஜராத்தி போன்றவைகளை விருப்பப் பாடங்களாகப் படிக்க ஏற்கனவே பல்கலைக் கழகத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு இல. பலராமன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் இந்தியைப் படிக்கவேண்டும் என்ற எண்ணம் தற்போது உண்டாகியிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி அவர்கள் படிக்க வேண்டுமென்று கோரும்போது, தமிழக அரசு அதை மறுபரிசீலனை செய்து இந்தி படிக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறுவது போன்று அத்தகைய விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்தோ, பெற்றோர்களிடமிருந்தோ இந்த அரசுக்கு வரவில்லை.

விவசாய வருமானவரி.

*3 வினா.—திரு. அ. கு. சுப்பையா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய வருமான வரி விகிதங்களை உயர்த்துமாறும் வேறு வகையில் புதிய வரிகளை விதிக்கவும் மத்திய அரசு யோசனை கூறியதா?

(இ) இத்தகைய யோசனைகளைப்பற்றி தமிழக அரசின் முடிவுகள் யாவை?